IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

DEPOSITION OF WITNESS

MCOP.NO. 164/2019 P.W.2

| | | |
|---|---|---|
| NAME | - | பாபு |
| FATHER NAME | - | அயிலு |
| VILLAGE | - | மாரியம்மன் கோவில் தெரு, ஒதியத்தூர், தாங்கல் |
| TALUK | - | அணைகட்டு, வேலூர் |
| CASTE | - | |
| OCCUPATION | - | |
| RELIGION | - | |
| AGE | - | 51 |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1872
07.03.2025.

முதல் விசாரணை

நான் இந்த வழக்கின் விபத்தை நேரில் பார்த்த சாட்சியாவேன். நான் என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளளேன். அதை முதல் விசாரணையாக ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். நான் எனது ஆதார் கார்டு நகலை தாக்கல் செய்கிறேன். நான் மேற்படி வழக்கில் குறிப்பிட்டுள்ள விபத்தினை நேரில் பார்த்தால் வழக்கு சம்பவங்களை பற்றி சாட்சி சொல்ல மனுதாரர் அழைத்ததின் பெயரில் சாட்சி சொல்ல வந்தேன்.

**2ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சம்மன் எதுவும் வரவில்லை. மனுதாரர்கள் கேட்டு கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்க வந்தேன். இந்த விபத்தை தாங்கள் நேரில் பார்கக்வில்லை என்றாலும் மனுதாரர்கள் அழைத்தன் பேரில் அவர்கள் சாதகமான சாட்சியம் அளிக்க வந்துள்ளீர்கள் என்றாலும், சரியல்ல.

4ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த விபத்து கடந்த 26.10.2018 அன்று நடந்தது. விபத்து நடந்த சமயத்தில் எங்கிருந்து எங்கு சென்றீர்கள் என்றால், தாங்கலில் இருந்து பூஞ்சோலைக்கு சென்றேன். விபத்தில் இறந்த வாசு இரு சக்கர வாகனத்தில் அமர்ந்து சென்றார். இரு சக்கர வாகனத்தை ஓட்டிய ராஜ் குமார் சடனாக பிரேக் போட்டதால் வாசு கீழே விழுந்து விட்டார். அப்போது எதிரே வந்த லாரி அவர் மீது ஏறி அவர் அந்த இடத்திலேயே இறந்து விட்டார். அந்த லாரியின் எண் AE3507 ஆகும். இரு சக்கர வாகனத்தின் பதிவு எண். டி.என்.23 சி ஜே 4574 ஆகும்.

2. ராஜ்குமார் லாரி வந்தததை பார்க்காமல் ஓட்டினார், லாரியை பார்த்தவுடன் தீடிரென் நிறுத்தி விட்டதால், வாசு கீழே விழுந்த விட்டார். இந்த விபத்து நடுரோட்டில் நடந்தது. இரு சக்கர வாகனம் சாலையின் ஒரமாக சென்று இருந்தால் விபத்து நடந்து இருக்காது என்றால், லாரி சரியான திசையில் சரியான முறையில் வந்து இருந்தால் விபத்து நடந்து இருக்காது. ராஜ்குமார் இடது பக்கம் ஓரமாக வாகனத்தை ஓட்டியிருந்தால் விபத்தை தடுத்து இருக்கலாம் என்றால், அது ஒரு பெரிய வாகனம் மட்டும் செல்லகூடிய அளவில் உள்ள ரோடாகும். தாங்கள் இந்த விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றாலும், நேரில் பார்த்தாக மனுதாரர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறிர் என்றால், சரியல்ல. இந்த விபத்திற்கு முழு காரணம் இரு சக்கர வாகனத்தை ஓட்டிய ராஜ்குமார் தான் என்றால், சரியல்ல. பொய் சாட்சியம் சொல்கிறிர் என்றால், சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 07.02.2025 தேதியில் கையெழுத்திட்டார்.

S/d.G.Radhakrishnan,

Additional District Judge(FTC)(FAC)
Vellore.